# ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும்




சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் மின், மின்னணுவியல் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் வெளியிடப்பட்ட மலருடன் கல்லூரியின் முதன்மை அதிகாரி ராஜா, தேசிய தொழில் கழக மேலாளர் ஆர்.பாலசுப்பிரமணி, பொது மேலாளர் எஸ்.எம்.எஸ். நளினி, கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், துறைத் தலைவர் ஏ.எல்.குமரப்பன்.

தாம்பரம் ஆக.10: நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும் என்று தேசிய தொழில்நுட்பச் சேவை மையத்தின் பொதுமேலாளர் எஸ்.எம்.எஸ். நளினி தெரிவித்தார்.

சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரி மின் மற்றும் மின்னணுவியல் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற ரோபோ செயல்பாடுகள் பற்றிய தேசியக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து மேலும் அவர் பேசியதாவது:

கடந்த மூன்று ஆண்டுகளாக, இந்த கல்லூரியின் மின் மற்றும் மின்னணுவியல் துறை மாநில அளவில் முதலிடத்தைப் பெற்றுத்திகழ்வது பாராட்டுக்குரியது. கிடைத்த இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள கடுமையான தொடர் உழைப்பு தேவை.

இங்கு பயின்ற மாணவர்கள் டென்மார்க்,சிங்கப்பூர் நாடுகளில் நடைபெறும் சர்வதேசக் கருத்தரங்குகளில் பரிசுகள் பெற்று இருப்பதும் பாராட்டுக்குரியது. இந்திய சுதந்திரத்திற்குப் பின் நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் நோக்குடன் பாரதப் பிரதமர் நேரு 1955ல் தொடங்கி வைத்த தேசிய தொழில்நுட்ப சேவை மையம், நாடெங்கும் பல்வகை சிறுதொழிற்சாலைகள் அமைப்பதற்கு அடித்தளமாகத்திகழ்ந்துவருகின்றது. அனைத்து செயல்பாடுகளுக்கும் ஆதாரமாகத் திகழ்ந்து வரும் மின்சக்தியின் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கின்றது. வளர்ந்த நாடுகளை ஒப்பிடும்போது, இந்தியாவில் தனிநபர் மின்சக்தி பயன்பாடு குறைவாக உள்ளது.

குறைந்த மின்சக்திச் செலவில் அதிக பயன்பெறுதல்,காற்றாலை,சூரியஒளி மூலம் மின்சக்தி பெறும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்றார் தேசிய சிறுதொழில் நுட்ப மையம் மேலாளர் எஸ்.எம்.எஸ். நளினி.

கருத்தரங்கில் தேசிய தொழில்நுட்ப மையம் மேலாளர் ஆர். பாலசுப்ரமணியன், கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், துறைத் தலைவர் ஏ.எல்.குமரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.